**நோர்வேஜிய மொழியிலும் சமூகயியலிலும் இலவசப்பயிற்சி**

**நோர்வேஜிய மொழியிலும் சமூகயியலிலும் இலவசப்பயிற்சி பெறும் உரிமை**

நோர்வேஜிய நாட்டில் உங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள வசிப்பிட உரிமையானது பின்வருவனவற்றில் முழுமையாக 300 மணிநேர இலவச பயிற்சி பெறும் உரிமையை வழங்கும்:

- நோர்வேஜிய மொழி (250 மணித்தியாலம் ) அத்துடன்
- சமூகயியல் (50 மணித்தியாலம்)

இப்பயிற்சியானது,

- உங்களுக்கு வசிப்பிட உரிமையானது கிடைக்கப்பெற்ற காலத்தில் இருந்து அல்லது
- நீங்கள் வசிப்பிட உரிமையுடன் நோர்வேயில் பிரவேசித்த காலத்திலிருந்து

மூன்று வருட காலத்திற்கு இலவசமாகும்.

இந்த 3 வருட கால எல்லைக்கு உட்பட்ட காலத்தில் நீங்கள் இந்த பயிற்சியை ஆரம்பிக்காவிடில் இப்பயிற்சியிற்கு நீங்கள் சுயமாக பணம் செலுத்த வேண்டும்.

**நோர்வேஜிய மொழி மற்றும் சமூகயியல் பயில வேண்டிய கடமை**

கீழ்வருனவற்றை விண்ணப்பித்து அங்கீகாரம் பெற விரும்பின், நீங்கள் நோர்வேஜிய மொழி மற்றும் சமூகயியலில் 300 மணிநேர பயிற்சியை கட்டாயம் நிறைவு செய்திருக்க வேண்டும்

- நிரந்தர வசிப்பிட உரிமை அத்துடன் / அல்லது
- பிரஜாஉரிமை

விண்ணப்பிக்கும் காலநேரத்தில் உங்களுக்கு 55 வயது அல்லது அதற்கு அதிகமாக இருப்பின் இக்கடமை தவிர்க்கப்படும்.

கீழ்வரும் சந்தர்ப்பங்களில், இக்கடமையை தவிர்க்க கோரி நீங்கள் விண்ணப்பிக்கலாம்

- உங்களுக்கு நோர்வேஜிய அல்லது சாமிய மொழியில் போதுமான அளவு மொழியறிவு இருப்பதை அத்தாட்சிப்படுத்தல் மேலும்
- உடல்நிலை குறைவு அல்லது வேறு முக்கிய காரணங்கள் இருக்கும் பட்சத்தில்

**நடைமுறை தகவல்**

இப்பயிற்சியை பெறுவதற்கான அல்லது இக்கடமையை தவிர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பத்தை வழங்குவதற்கு விரும்பினால், நீங்களாகவே, நீங்கள் மக்கள் பதிவு நிலையத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் மாநகர சபையில் இருக்கும் வளர்ந்தோர் பயிற்சி நிலையத்தை அணுகி அங்கு விண்ணப்பத்தை வழங்கவேண்டும். உங்களுக்கு ஏதாவது கேள்விகள் அல்லது கால எல்லைகள் மற்றும் உரிமைகள் பற்றி மேலதிக விபரங்கள் தேவையாயின் வளர்ந்தோர் பயிற்சி நிலையத்தை தொடர்பு கொள்ளவும்.

நீங்கள் இத்தகவல்களை கீழ்வரும் இணையத்தளங்களிலும் பெற்றுக்கொள்ளலாம் www.imdi.no , www.udi.no